# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q/J/29/News/85*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 146 JAFFNA, FRIDAY, 17th OCTOBER, 1986 No. 42

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



***Subscription***

Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*
The Manager,
'Morning Star', Vaddukoddai.



**UNDELIVERED ISSUES**

Please re-address undelivered issues of the Morning Star to:-
The Manager,
"Morning Star",
Vaddukoddai.


### 150th Anniversary of the Chavakachcheri Church

The C. S. I. Church Chavakachcheri conducted its 150th anniversary celebrations on Sunday the 5th instant. At the morning worship four children were confirmed as full members of the Church. It was followed by a fellowship breakfast. A public meeting was conducted at 3.00 p. m. in the Parish Hall It was presided over by Rev S. C. Arnold. Speeches were made by Mr. S Jebanesan and Rt. Rev. D. J. Ambalavanar. Chavakachcheri Church had its beginnings in 1834 when *Dr. John Scudder* proclaimed the tidings of comfort and joy The 150th anniversary celebrations were planed for 1984 but was postponed because of the unsettled state of affairs in the country.


### New Canon of the Anglican Church

The Rev. Dr Donald Kanagaratnam, presently Vicar of the Church of Holy Spirit in Vavuniya and Director of "Oppuravu Illam" Centre a a few miles away from Vavuniya has been made a Canon of the Church of Ceylon by the Bishop of Colombo, Rt. Rev. Swithin Fernando. Dr. Donald Kanagaratnam is a senior clergyman of the Church of Ceylon and was for many years on the staff of the Pilimatalawa Theological Seminary and for some years its Principal before his retirement. We congratulate Dr. Donald Kanagaratnam on the well deserved honour that has been given to him in recognition of his distinguished services,

### Induction Service

Mr. G. Devanandan Anandarajan who has just complete his theological studies at the United Theological College, Bangalore was inducted at a Service at the Cathedral Church, Vaddukoddai on Sunday the 5th of October, 1986 at 6-00 p. m. The Rt Rev. D. J. Ambalavanar, Bishop of the Diocese who inducted the candidate also preached the Sermon. Mr. Dev. Anandarajan is the eldest son of the late Mr. C. E. Anandarajan, Principal of St. John's College and Mrs. Padma Anandarajan. He graduated at the Madras Christian College, Tambaram in Science before entering the United Theological College as a candidate of the Jaffna Diocese of the C. S I. He has now been assigned special responsibility as Chaplain of the Jaffna University & Youth Work in the Diocese. As soon as the residence for the Chaplain at the University Christian Students Centre at Tinnevely is completed, he will go into residence there.

### Liberation Cartography



Aa edition of the *Peter's Projection Map of the World*, has been co-published by the Australian Council for Overseas Aid and the United Nations Development Programme. At first glance the Peter's World Map might seem a strange shape. But the problem lies with our expectations, not with the map itself.

Most of us have had to use world maps which distort the size and geographical importance of the richer countries of the North in relation to the developing countries of the South.

Peter's map is 'liberation cartography' and its increasing wide acceptance and use will end the tyranny of Mercator that put Europe at the centre of the world and then drew the map in relation to Europe.

Traditional world maps have often been gross distortions, showing countries in the northern hemisphere as much larger than they really are. The Peter's Projection shows all countries according to their actual sizes. It thus reflects visually the real geographical importance of the Third World.

(CCA News)

### 'Onward Christian Soldiers'

To most people in the North (especially Christians) who were (mis) fortunate to witness the spectacle on State television's news spot it was an unbelievable and unedifying sight. I refer, of course, to the ceremony held at a Roman Catholic Cathedral in Colombo last last week during which the regimental colours of several battalions of the armed forces were blessed by Church leaders. The blessing of these battalions was prior to their departure to the war front where they would be rendering 'dedicated and loyal service' to protect the 'people of this land' and where they would be involved in a righteous war against the Tamil 'terrorists' of the North and East. The Roman Catholic Archbishop, Rt. Rev Nicholas Marcus Fernando was assisted in this Service by the Anglican Bishop of Colombo, the Rt. Rev. Swithin Fernando and the President of the Methodist Conference, Rev. H. Fernando. (In) appropriately enough the processional hymn was onward Christian Solders, marching as to war......'.

It is intriguing that in a country where Buddhism is the State religion that the Christian Church should play such a prominent role in sanctifying the efforts of the armed forces. Further, it is unbelievable that the Church should be involved in blessing the very same armed forces whose efforts at decimating the Tamil population and whose atrocities and killings have been well documented by organisations both here and abroad. Several of these organisations are Church related Memories are short lived or surely these Church leaders would have recalled the two Roman Catholic priests and the Methodist Clergyman who were cold bloodedly murdered by Security personnel The irony is tragic.

Only one deduction can be made from this and that is that the Church hierachy of the South has decided that, as in the past, it is wiser, more popular and certainly safer to toe the official line. Whilst in most countries the Church in its fight for justice finds itself at loggerheads with the powers that be. here in Sri Lanka we have the dismaying spectacle of Church leaders falling over themselves in their eagerness to spout populist sentiment. By their actions they reveal a total lack of sensitivity to the plight of the Tamil people who are also a 'people of this land'. The Tamil Times' recent editorial headline that 'The Church in Sri Lanka: More Sinhala, Less Christian' seems to be unfortunately borne out by such events.

To be a witnessing Church is not easy. It entails pain and sacrifice especially in a society where Christianity is in the minority. That, however, is the cross that the Church, in all parts of this country is called to bear. To witness to the truth — and to hell with the consequences.

— D. C. A.

### In Lighter Vein

Humour stories, anecdote, and sayings associated with the Clergy and Church.

### IN MEMORIAM

IN EVERLOVING MEMORY OF

**J. E. Soundrarajah**

Called to rest
16th October 1981

"*Return unto thy rest O my soul;*
*for the Lord hath dealt bountifully with thee*"
Ps.116:7.

Fondly rememembered by his wife, children and his loved ones.

5, Power House Lane 2,
Jaffna.


JAFFNA COLLEGE
VADDUKODDAI.

**ADMISSIONS — 1987**

Students will be admitted for only three classes.

YEAR 1 — Students born before 31-1-1982 only will be admitted.

YEAR 7 & 10 — Only a few students will be admitted for these two classes.

Please apply on forms obtained from the College office before 4th November. 1986.

Year 1 Interview and Admission tests for Years 7 & 10 will be conducted on 15th November, 1986 at 9.00 a. m.

Jaffna College,
Vaddukoddai.

**Principal.**

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

[ வெள்ளிதோறும் வெளிவருவது கிறிஸ்தவ வார இதழ். ]

" நீதி ஜனத்தை உயர்த்தும்! பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 146 ] 17-9-86 [ இதழ் 42


## இலங்கை அங்கலிக்கன் சபையின் புதிய 'கனன்'

வவுனியாவில் உள்ள தூய ஆவியரின் திருச்சபைக் குருவாய்ப் பணியாற்றி வரும் அருள் திரு. கலாநிதி டொனல்ட் கனகரத்னம், இலங்கைத் திருச்சபையின் உயர் நிலைச் சமயகுரு ( கனன் ) வாக, கொழும்பு பேராயர் அருள்மிகு சுவிதின் பெர்னாந்தோ அவர்களால் நியமிக்கப்பட்டார். இவர் ஒப்புரவு இல்ல நிலையத்தின் இயக்குனராகவும் பணியாற்றி வருகிறார். டாக்டர் டொனல்ட் கனகரத்தினம் இலங்கை திருச்சபையின் சிரேஷ்ட குருவானவர். அனேக ஆண்டுகள் பிலிமத்தலாவ இலங்கை இறையியல் கல்லூரியின் விரிவுரையாளராகவும், சில ஆண்டுகள் இக்கல்லூரியின் முதல்வராகவும் கடமையாற்றினார். இவருக்குக் கிடைத்த இக் கௌரவ பதவிக்காக இவரை வாழ்த்துகிறோம்.

## ஊழியப்பதவியில் அமர்த்தும் ஆராதனை

பங்களூர் ஐக்கிய இறையியற் கல்லூரியில் தன் இறையியல் பயிற்சியை முடித்து வந்த திரு. G. ஆனந்தராஜனை, ஊழியப் பதவியில் அமர்த்தும் ஆராதனை, பேராயர் அருள்மிகு. டி. ஜே அம்பலவாணர் அவர்கள் தலைமையில், வட்டுக்கோட்டை திருக்கோவிலில் இம் மாதம் 5 ஆம் திகதி மாலை 6-00 மணிக்கு நடைபெற்றது. பேராயர் அம்பலவாணர் அவர்கள், திருப்பணியாளரை ஊழியனாக முறைப்படி அமர்த்தி, அருளுரை வழங்கினார்.

திரு. தேவ் ஆனந்தராஜன், காலஞ்சென்ற திரு. C. E. ஆனந்தராஜன், திருமதி. பத்மா ஆனந்தராஜன் அவர்களின் மூத்த மகன். இவர் சென்னை கிறிஸ்தவ கல்லூரி, தாம்பரத்தில், சமூக அறிவியல் துறையில் பட்டம் பெற்றார். பின்னர், தென் இந்திய திருச்சபை, யாழ். ஆதீனத்தினால் தெரிவு செய்யப்பட்டு பங்களூர் இறையியல் கல்லூரிக்கு அனுபபப்பட்டார். இப்பொழுது, யாழ். பல்கலைக் கழகத்தின் சமய குரவராகவும், ஆதீனத்தின் வாலிபர் ஊழியப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் கட்டப்பட்டு வரும் கிறிஸ்தவ மாணவர் நிலையம் கட்டிமுடிக்கப் பட்டதும், அங்கு தங்கிப் பணியாற்றுவார்.

## N. செல்வரத்னம் நினைவு நிதி:

இரத்னம் கணக்காளர் கூட்டு நிலையத்தின் முன்னாள் அதிபர் - காலஞ்சென்ற திரு. N. செல்வரத்னம் அவர்களின் நினைவாக, திருமதி செல்வரத்தினமும் பிள்ளைகளும் சேர்ந்து, ரூபா. 60,000/- கொண்ட ஒரு புலமைப்பரிசு நிதியத்தை தெ. இ. சபை. யாழ். ஆதீனத்தில் துவக்கியுள்ளனர். இந்த நிதியத்திலிருந்து இரண்டு மாணவர்களுக்கு, யாழ். கல்லூரியில் ஒருவருக்கும், உடுவில் மகளிர் கல்லூரியில் ஒரு மாணவிக்கும், கல்லூரி விடுதிச் செலவு முழுவதையும் கொடுத்துதவ வேண்டுமென ஒழுங்கு செய்துள்ளனர். திரு. செல்வரத்தினம் யாழ் கல்லூரியின் திறமையான மாணவனாகவும், திருமதி. செல்வரத்தினம் உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியுமாவர். இவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி மற்றவர்களும், எங்கள் கல்லூரிகளில் படித்துவரும் வறிய மாணவர்களுக்கு உதவ முன்வரும்படி கேட்கிறோம்.

## இளையதம்பி நினைவு நிதி:

யாழ்ப்பாண சபாசங்கத்தில் நெடுங்காலமாக நல்லூழியம் புரிந்த காலஞ் சென்ற வண. S. இளையதம்பி அவர்களின் பேரன் திரு செல்வின் இளையதம்பி, யாழ். ஆதீனத்தின் பொறுப்பாட்சியில், உடுவிலில் தொடங்கிய இளையதம்பி நினைவு நிலையத்தை நடத்துவதற்காக, ஒரு நினைவு நிதியை நிறுவியுள்ளார்.

இந்த நிலையத்தில் — பாலர் பாடசாலையும் பெண்களுக்குத் தையல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவற்றிற்குரிய செலவுகளுக்கு இந்த நிதியத்திலிருந்து கொடுக்கப்படுகிறது. மேலும், உடுவில் மகளிர் கல்லூரியில் படிக்கும் 33 பெண்பிள்ளைகளுக்கு இந் நிலையத்தில் விடுதி வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பெண்கள் நிலையத்திற்கு யாழ். ஆதீனம் பணவுதவி செய்து வருகிறது.

இந்த நிலையத்தின் பணிகளுக்காக, திரு. செல்வின் இளையதம்பி ரூபா 110,000/- ஒரு நிரந்தர நிதியாக அமைத்துள்ளார். எங்கள் சமுதாயத்தில் உள்ள வறியவர்களுக்கும், ஒடுக்கப்படுகிறவர்களுக்கும் உதவுமுகமாக தொடக்கப்பட்ட இந்நல்ல முன்மாதிரியை மற்றவர்களும் பின்பற்ற முன்வரவேண்டும்.

## ★ பாலர் நேசன் ★

— சிறுவர் மலர் —

### நாதா உன் அருள் தாரும்

1

இன்றையப் பொழுதில் இருப்பவர்
எல்லாம்
நாளையப் பொழுதை காண்பதே இல்லை
நன்றவர் பொழுது நலமுடன் கழிய
நாதா நின் அருள் வேண்டும் - இயேசு
நாதா உன் அருள் வேண்டும் !

2

புலம்பிடும் சத்தம் கேட்டிடும் போது
கலங்கியே நிற்கும் கருணையின் வடிவம்
நிலைகுலையும் போது பக்கம் வருவீர் -
பரனே நின்
அன்பே பெரிது தூய பரனே நின்
அன்பே பெரிது !

3

நாயின் விதவை நலிவுற்றபோது
நம்பிக்கையாக நின்றீர் அங்கு
தாயின் மகனை உயிரோடெழுப்பி
விதவையின் கண்ணீர் துடைத்தீர் - ஐயா
விதவையின் கண்ணீர் துடைத்தீர் ஐயா !

4

அலைகளின் நடுவே அகப்பட்டு சீடர்
" ஐயோ " என்று கதறியபோது
புயலை அடக்கி அமைதி காத்த-புனிதா
உன் மாட்சிமை பெரிது புனிதா
உன் மாட்சிமை பெரிது !

( Rev. A. V. Y. )

## முப்பத்தொன்பதாம் ஆண்டு நிறைவு விழா

தென் இந்திய திருச்சபை யாழ். மறைமாவட்டத்தின் 39 ஆம் ஆண்டு நிறைவு விழா, கடந்த சனிக்கிழமை ( 11-10-86 ) வட்டுக்கோட்டையல் சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை 8-00 மணிக்கு, பேராயர் அருள்மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் உதவிக்குரு அபிஷேக ஆராதனை திருவிருந்துடன் நடைபெற்றது. புங்குடுதீவுச் சபையின் ஊழியன் திரு. V. இராஜ்குமார் உதவிக்குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவ்வாராதனையில், அருள் திரு. சாம் தம்பு, அருள் திரு. T. S. பிரேமராசா ஆகியோர் பங்கெடுத்தனர். கிளிநொச்சி சபைக்குரவர் அருள்திரு. S. ஜெயநேசன் அருளுரை ஆற்றினார். தீவுப்பகுதிச் சபைகளின் சேகரக்குரவர் — அருள் திரு. A. ஜெயகுமாரன், திரு. இராஜ்குமாரை பேராயர் முன், சம்பிரதாய முறைப்படி நிறுத்தினார். இவ்வாராதனையில் திரு. C. இராஜசவுந்தரம், திருமதி. R. இரத்தினராசா, திரு G. இராஜநாயகம் ஆகியோர் வேதப்பாடங்கள் வாசித்தனர். வழிபாட்டு முறைப்படி பேராயர், திரு. இராஜ்குமாரின் கால்களைக் கழுவினார். அதன்பின் திரு. இராஜ்குமார் புங்குடுதீவுச் சபை அங்கத்தவர் ஒருவரின் கால்களைக் கழுவினார்.

அபிஷேக ஆராதனையின் பின் தொடர்ந்து திருவிருந்து ஆராதனை நடைபெற்றது, ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இவ்வாராதனையில் கலந்து கொண்டனர். ஆராதனையின் முடிவில் அனைவருக்கும் தேநீர் விருந்துபசாரனை அருள் திரு. இராஜ்குமாரின் தாய், இனசுற்றத்தினரால் நடத்தப்பட்டது. திரு. இராஜ்குமார், காலஞ்சென்ற திரு. வரத்துங்கம் செல்லிப்பிள்ளை திருமதி. வரத்துங்கம் அவர்களின் மகன், இவர் முதலில் இணுவில் சபையில் ஊழியம் செய்தார். யாழ். கல்லூரி ஒட்லி மண்டபத்தில் காலை 11-00 மணிக்கு பொதுக் கூட்டம் பேராயர் அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கொழும்புச்சபை உதவி ஊழியன் திரு. T. தேவநேசன் வேதப்பாடம் வாசித்து செபம் செய்தார். கிறிஸ்தவ சமய சமூக ஆய்வுக் கூட இயக்குனர் திரு.

## மரணம்

### கிறிஸ்டபெல் ஜெயந்தி டேவிட்

ஏழாலை தெற்குச் சபையைச் சேர்ந்த டாக்டர் V. R. டேவிட் அவர்களின் அருமை மனைவியும், உடுவில் சபையைச் சேர்ந்த திரு & திருமதி ஸ்டீபன்ஸ் அவர்களின் அன்பு மகளுமாகிய கிறிஸ்டபெல் ஜெயந்தி இம்மாதம் 5ஆம் திகதி காலமானார்.

இவரின் இறுதியாராதனை உடுவில் லவ்லேனில் உள்ள இவரது பெற்றோரின் இல்லத்தில், 8-10-86 பி. ப. 3-00 மணிக்கு நடைபெற்றது. சபைக்குரு அருள் திரு. D. C. இரத்னசிங்கம், பருத்தித்துறை மெதடிஸ்த சபைக் குரு, அருள்திரு. கருணைராஜா அவர்களின் உதவியுடன் ஆராதனையை நடத்தி பிரசங்கஞ் செய்தார் அருள் திரு D. R. அம்பலவாணர் இரங்கலுரை வழங்கினார். போதகர் அவர்கள் தமது உரையில், 'காலஞ்சென்ற ஜெயந்தியின் வாழ்வு அன்பின் செயல்கள், தியாகப் பணிகள், விசுவாசம் நிறைந்த வாழ்வாக ஒளிர்ந்தது. துன்பங்கள் மத்தியிலும் அவர் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக தன் குடும்பத்தை விசுவாசத்துடன் நடத்தினார் என்று புகழ் அஞ்சலி செலுத்தி, இத்தகைய நறுமணங் கமழும் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்த ஜெயந்திக்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்தி, அவர்தரும் ஆறுதலைப் பெறுங்கள்" என்று கூறினார்.

உடுவில் கல்லறைத் தோட்டத்தில் வண. இரத்னசிங்கம் அவர்கள், வண. அம்பலவாணர், வண. கருணைராசா ஆகியோரின் உதவியுடன் நல்லடக்க ஆராதனையை நடத்தினார். ஜெயந்தியின் கணவர், பெற்றோர், சகோதரர், சகோதரி விமலாந்தி, மாமியார் திருமதி வயிரவநாதன் ஆகியோர்க்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

---

W. N. S. சாமுவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இதன் பின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் யாழ். கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் பங்கெடுத்தனர் பிற்பகல் 1-30 மணியளவில் ஐக்கிய விருந்தில் அனைவரும் மகிழ்வுடன் கலந்து கொண்டனர்.

மனனி வாக்கு

அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை.

— நீதிமொழிகள் 16 : 18

உதயதாரகை

# கிறிஸ்தவ குடும்ப வாழ்வு

இந்த வாரத்தில், யாழ். ஆதீனச் சபைகளில் கிறிஸ்தவ குடும்பத்தைப் பற்றிய சிறப்பு ஆராதனைகளும், கருத்தரங்குகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. குடும்பத்தின் மூலம் சமாதானத்தை நமது சமுதாயத்தில் வளர்க்க முடியுமென்பதைக் கூட்டாகச் சிந்தித்து ஏற்ற தீர்மானங்களை எடுத்து, நடைமுறைப்படுத்த வேண்டுமென, யாழ். ஆதீன கிறிஸ்தவ குடும்ப ஒன்றியத்தின் செயற்குழு பணித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மனித வரலாற்றின் துவக்கத்திலேயே குடும்பம் நிறுவப்பட்டது என்பதே கிறிஸ்தவ நம்பிக்கை. இந்த அமைப்பின் படைப்பில் கடவுளின் கரம் செயல்பட்டிருப்பதை நாம் காணலாம். கடவுளால் படைக்கப்பட்ட வேறு எந்த உயிரினத்திற்கும் அருளப்படாத ஒரு ஆசீர்வாதத்தை மனிதன் தன் குடும்ப வாழ்க்கையில் பெற்றிருக்கிறான். இதில், கடவுளுக்கு ஒரு சிறந்த நோக்கம் உண்டு என்பதை நாம் உறுதியாக நம்ப வேண்டும். கடவுள் மனிதனுக்குக் குடும்ப வாழ்க்கையை அருளினதின் உன்னத நோக்கத்தை உணர்ந்து கொள்வது நமது கடமை.

மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சமுதாய, பொருளாதார அரசியல், சமயம் சார்ந்த நிறுவனங்களின் அமைப்புகள் ஆகியன, குடும்ப வாழ்வின் அடிப்படையிலிருந்துதான் அமைக்கப்பட்டுள்ளன. எந்த ஒரு நிறுவனத்தின் ஒருமைப்பாடு, ஒருவர் மேல் ஒருவர் கரிசனை கொண்டு அதன் மூலம் ஒன்றாக உழைத்தல், போன்றவை குடும்ப வாழ்க்கையின் மூலமாகவே கற்றுக்கொள்ள முடியும். படைப்பின் இந்த சிறப்பின் இரகசியத்தைக் குறித்து வேதாகமம் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. கடவுளால் உருவாக்கப்பட்ட ஒவ்வொருவனும், கடவுளின் வார்த்தையின மூலம் தெளிவாக்கப்பட்டுள்ள இறைவனின் திட்டமாகிய இந்த இரகசியத்தைப் புரிந்து கொள்ள முயல்வது அவசியம்.

குடும்பம் அநேக வழிகளில் மனித சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் முதுகெலும்பாக இருந்து வந்துள்ளது. குடும்பம் மக்களைப் போஷித்து உருவாக்கும் தொட்டிலாகும். நாளைய சமுதாயத்தின் மக்கள் எப்படிப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்பதை, இன்றைய குடும்பத்தின் நிலையே தீர்மானிக்கக் கூடியதாயுள்ளது.

மனிதனால் தொடங்கப்பட்ட ஏனைய நிறுவனங்கள் உயர்ந்தோ தாழ்ந்தோ போயிருப்பினும், கடவுளால் நிறுவப்பட்ட குடும்பம் என்ற நிறுவனம், மனித சமுதாயத்தின் துவக்கத்திலிருந்து இன்றுவரை எல்லாவித எதிர்ப்புகளையும் சமாளித்துக் கொண்டு இன்னமும் உறுதியாக நிற்கிறது. உலகில் உள்ள எந்த சக்தியும் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனத்தை அழிக்க முடியாது. இருந்தும் நமது வேதாகமம் வெளிப்படுத்தும் குடும்ப வாழ்வின் அடிப்படைக் கருத்திலிருந்து விலகிச் செல்லும் சமுதாயங்களில் குடும்பங்கள் அசைவு கண்டிருப்பதை நாம் காண்கிறோம். இதனையுணர்ந்து நமது சபைகள் கிறிஸ்தவ குடும்பங்களை உறுதிப்படுத்தும் பணிகளை ஏற்ற முறையில் செய்தல் வேண்டும் என்பதை வற்புறுத்த விரும்புகிறோம்.

## கலாநிதி பிறேமன் நயில்ஸ்:

காலஞ்சென்ற கலாநிதி D. T. நயில்ஸ் அவர்களின் மூத்த மகன் கலாநிதி பிறேமன் நயில்ஸ், கடந்த மாதம் தொடங்கி அனைத்துலக சபை மன்றத்தின் (W. C. C.) புதிய ஆணைக்குழுவாகிய நீதி சமாதானம் படைப்பின் முழுமை என்பதின் செயலராக நியமனம் பெற்றார். இவர் முன்னர் ஆசிய கிறிஸ்தவ மன்றத்தின் துணைப் பொதுச் செயலாளராகக் கடமையாற்றினவர். இவரது புதிய பணியகம் இப்போ ஜெனிவாவில் உள்ள அனைத்துலக சபைகள் மன்றத்தின் தலைமையகத்தில் உளது. இப் புதிய பதவியில், அனைத்துலகத் திருச்சபைக்கு குறிப்பிடத்தக்க பணியாற்றுவாரென எதிர்பார்க்கிறோம்.

## "பண்பாட்டுப் படுகொலையை ஒத்ததான இராணுவ அட்டூழியங்கள்"

### யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு மகஜர்

வடபகுதியில் பண்பாட்டுப் படுகொலைகளை ஒத்த இராணுவ அட்டூழியங்கள் நிகழ்த்தப்படுவதாக, யாழ். பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

மேற்படி மகஜரில் மேலும் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாவது :— வடபகுதியில் நிறுவப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் காரணமாக ஹாட்லி கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்நிலைக் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி, சித்திவிநாயகர் வித்தியாசாலை, பலாலி ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதும்—

யாழ்ப்பாண மத்தியகல்லூரி, வேம்படி மகளிர் உயர்நிலைக் கல்லூரி ஆகியவை மூடப்படவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதும்—

நாட்டின் பாதுகாப்பு 1981ல் அநேகமாக முழுமையாக எரிக்கப்பட்டு பொது மக்களது நன்கொடைகள் மூலம் மீள்வித்துப் புதுப்பிக்கப்பட்ட யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையம் சேதப்படுத்தப்பட்டிருப்பதும் பண்பாட்டுப் படுகொலைகளை ஒத்தனவே!

நாட்டின் பாதுகாப்புப்படையினரால் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை ஷெல் மூலம் தாக்கப்படுவதை உடனடியாகத் தலையிட்டு நிறுத்துமாறு நாம் தங்களுக்கு விண்ணப்பித்து எழுதிய 1986 ஆகஸ்ட் 25-ம் திகதி கடிதத்தைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். அதே திகதியிட்ட பிறிதொரு கடிதத்தில் யாழ் கோட்டை, மண்டைதீவு இராணுவ முகாம்களை அப்புறப்படுத்தும்படியும் வலியுறுத்தியிருந்தோம்.

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையையும், யாழ். மத்திய கல்லூரியையும் மூடவேண்டிய ஒரு நெருக்கடி எழுந்திருப்பதாகவும் தற்பொழுது அறியவருகிறோம்.

துணுக்குறச் செய்யும் இச்செய்திகுறித்து இக் கல்லூரிகளது பழைய, தற்போதய மாணவர்கள், நலன்விழைவோர், கல்விமான்கள் இன்னும் அப்பாடசாலைகளால் சேவிக்கப்படும் அப்பகுதிப் பொதுமக்களது ஆழ்ந்த துயரினை நாமும் பகிர்ந்து கொள்ளுகிறோம்.

தீவிரவாத இளைஞர்களுடன் மல்லாடுவது என்ற சாட்டுப் போக்கில் குடிநெருக்கமுள்ள பகுதிகளில் இராணுவமுகாம்களை நிறுவுவதுமூலம் பண்பாட்டுப் படுகொலைகளுக்கே வழிசமைக்கப்படுகின்றது.

தலைசிறந்த பாடசாலைகளான ஹாட்லி கல்லூரி, மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலைகளுக்கு அருகே பருத்தித்துறை இராணுவ முகாம் நிறுவப்பட்டது நாட்டின் பாதுகாப்புப் படையினரால் ஹாட்லி கல்லூரி நூலகம் முழுமையாக எரிக்கப்பட்டது. சூழ வாழ்ந்த மக்கள் குடிபெயர்ந்தனர். தொழில் நிலையங்களும், சந்தைகளும் புறம்போக்கான இடங்களுக்கு நகர்த்தப்பட்டன. கூட்டு மொத்தமான பெறுபேறு ஒருகில்லோ மீற்றர் பரப்பளவு வெறுமையாக்கப்பட்டதே!

அதே நிலைமைதான் வல்வெட்டித்துறை நகரிலும்.

வடக்கில் பாடசாலைகளை மூடுவதும், நூலகங்களை அழிப்பதும் தற்பொழுது அரசின் ஒரு கொள்கையாக வந்துவிட்டதாகவே உள்ளூர் மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்புப் படைகள் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு நேர்மாறாக நாட்டின் பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்கும் பணயக் கைதிகளாக நாம் வைக்கப்பட்டிருக்கும் நாடகக் காட்சியின் பார்வையாளர்களாக யாழ் பிரசைகள் குழுவினராகிய நாம் இருக்கின்றோம்.

நாளேடுகளின் பிரகாரம் 1986 ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்ட அப்பாவிப்பொது மக்களின் எண்ணிக்கை முறையே 292ம், 137ம் ஆகும். 1986 ஜூலையில் காணாமற் போனோர் எண்ணிக்கையோ 96.

அதி உத்தமரே! இந்நாட்டின் குடிமக்களாகத் தமிழ் மக்களும் கருதப்பட வேண்டுமாகில் பொது மக்களுக்கு உயிராபத்தை உண்டு பண்ணும் —

பாடசாலைகள், நூல்நிலையங்களை அழிக்கும் இராணுவமுகாம்கள் அகற்றப்படவேண்டும்.

இம் முகாம்கள் வெறும் கௌரவப் பெறுமதியைக் கொண்டனவேயன்றி குடிமக்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்தித்தர உதவா.

அதி உத்தமராகிய தாங்கள் இந்த இராணுவ முகாம்கள் அனைத்தையும் அப்புறப்படுத்துவீர்களாகில் —

பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மீண்டும் இயங்குவதற்கும், பொது நூலகங்கள், வழிபாட்டிடங்கள் தொழிற்படவும், பாடசாலைகள் மூடப்பட வேண்டியதற்கான நெருக்கடியை அகற்றவும் வழிவகுப்பதாக அமையும்.

இப்படி யாழ். பிரஜைகள் குழுவின் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(நன்றி: உதயன்)

## "இயேசு என்னை நேசிக்கிறார்"

தெல்லிப்பளைச் சபையின் ஆதரவில் "இயேசு என்னை நேசிக்கிறார்" (Jesus Loves Me) என்னும் நிலயம், கடந்த ஞாயிறு (12-10-86) பேராயர் அருள்மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அன்று காலை ஆராதனையின் பின் சபையார் பவனியாக குருமனை வளாகத்தில் "கர்த்தர் பெரியவர்" என்ற பாடலைப் பாடிக் கொண்டு வந்தனர். சபைக்குரு. அருள்திரு. T. S. பிரேமராசா அவர்கள், அருள்திரு. V. இராஜ்குமாரின் உதவியுடன் திறப்புவிழா ஆராதனையை நடத்தினார். போதகர் இந்நிலையத்தின் நோக்கத்தை சபையாருக்கு விளக்கியுரைத்தார். பேராயர் அவர்கள் குருமனையின் கிழக்கு பக்கத்தில அமைந்துள்ள இந்நிலயத்தின் அலுவலகத்தைத செபத்துடன் திறந்து வைத்தார். அனைவரும் "இயேசென்னை நேசிக்கிறார் ... ...." என்ற பாடலைப்பாடி இறைவனைப் போற்றினர். பேராயரின் ஆசீர்வாதத்துடன் இவ்விழா இனிது முடிவுற்றது.

**EDITORIAL**

## Side by Side

An Art Exhibition organised recently in Kuala Lumpur, by the Malaysian – British Society, displaying works of Art by British and Malaysian Artists, whose common bond was that they had studied in the United Kingdom, had a lofty title, "*Side by Side*".

But unpredictably, a Malaysian Artist, in the two works she contributed to the Exhibition saw more in the title than the organisers intended. Controversy soon erupted when the Malaysian Artist's 'works' were removed minutes before the official opening of the Exhibition. Sita Hasmah, the wife of the Malaysian Prime Minister, Mahathir Mahamad was the Chief Guest, at the opening ceremony.

A national gallery official disclosed that top officials of the British High Commission and the Malaysian – British Society were present at the a Preview of the Exhibition before the official opening. "I can't tell you why we took them down", he told the incensed Malaysian artist "but nothing like this has ever happened before".

One of the controversial 'works', was entitled "*Friends in Need*" and portrayed Margaret Thatcher, the British Prime Minister juxtaposed with U. S. President, Ronald Reagan, with photographs of a baby, killed during the U. S. air raid on Libya.

The other controversial picture was entitled "*Save the seed that will save Black People*", showing Margaret Thatcher again this time juxtaposed with a group of South Africans whom she protectively holds in her arms. Both works of Art were, however, later put on display at the Exhibition.

On July 3rd this year, United States celebrated "Miss Liberty" – the 100th birthday of the *Statue of Liberty*. Gleaming brightly with her new gold leaf torch, patterned on French Sculptor. Barthholdi's original design, the renovated Statue was shown flambuoyantly rising above a flotilla of 30,000 pleasure boats.

But side by side, the reigning spirit of the time was not concealed in the pomp and pageantry of the Peace Festival. President Reagan with the First Lady, presiding at the re-lighting ceremony stands dwarfed under three giant cannons, projecting from the American battleship *Iowa* and declares "*We are keepers of the Flame of Liberty*".

Sri Lanka has not been an exception to the "Side by Side" scenes we witness in the world today. Marking *World Habitat Day* this year (a harbinger for the U. N. International year of "*Shelter for the Homeless*" in 1987) was a spectacular demonstration on 5-10-86 – the "March for Shelter" – of an estimated half million people who converged on Galle Face Green from six points in the City. Each person on the March bought at the starting point, a Sevana Lottery Ticket, and armed himself or herself with a contribution list for public donations which eventually added up to Five Millon Rupees for building houses for the houseless, when the Campaign and March ended.

But in the North and East of the country, the crescendo of voices for "Shelter for the Homeless" has given place to the mute cry of citizens whose dwellings have been destroyed for military exigencies or as military reprisals *The March of the Dispossesed* we witness today, side by side with *The March for Shelter*.

On the 10th and 11th of October, Jaffna witnessed, after a brief lull, the destruction and damage of several buildings and dwellings by shell-fire from the Jaffna Fort. Two were killed — the head cook of Subas Cafe and a taxi-owner at the Jaffna Grand Bazaar. The exodus of homeless from the Koddady area will soon, it is believed be augmented by people from other areas round about the Fort. With the present depressing sight of craters on the public highways in many parts of the town, it is feared that the whole landscape around the Jaffna Fort area may soon become a moonscape, unless a firm and unequivocal decision is taken about the garrison inside the Jaffna Fort.

The method chosen to meet militant activity around the Jaffna Fort is very unfortunate. It is the recourse to a collective reprisal that strikes an innocent civilian population in the heart of the town, with the concomitant damage to school buildings, the hospital, industrial establishments, libraries, theatres and auditoriums that enrich the life of the people in the area.

In the meanwhile, side by side with 'war' in Sri Lanka, there is a dizzy birst of activity in New Delhi to bring peace in the country where no peace reigns. As many as *six* ministers of State of the Indian Government are involved in the Sri Lankan Peace Process. *Mr. P. Chithambaram* is handling the Sri Lankan question for the Delhi government. *Mr. M. G. Ramachandrau* has had talks on Wednesday (8-10-86) with the Tamil Groups in Madras, along with *Mr. V. R. Nedunchezian, Mr. S. Ramachandran*, the Indian Constitutional Expert, and *Mr. A. P. Venkateswaran*, the Indian Foreign Secretary. The TULF has had extensive discussions with *Mr. Shiv Shankar*, the Indian External Affairs Minister. India is throwing all its massive weight to help the Sri Lankan government to solve the deadlock, it has never sought to rock the government 'boat' too violently.

*Peace* and *War* are big media business today. But can they really exist side by side in Sri Lanka? Whatever be the political or constituional implications of "Devolution of Power", a cessation of hostilities is a moral and spiritual imperative in the present context of escalated military activity.

It is said that the Spartan code produced good soldiers and nothing more. It made vigour of body 'a graceless brutality" because it killed nearly all capacity for the things of the mind [It was a depressing story we recently read in newspapers that toy shops today are studded with more toy guns, than any other toys].

Said Dr. Samuel Jonson: — "*I wonder you have no penetration enough to see the strong inducement for this excess. For he who makes a beast of himself gets rid of the pain of being a man.*"

*Memorial Service in Jaffna*

### V. Navaratnam

A service of thanksgiving for the life and work of the late Mr. V. Navaratnam was held on Saturday the 4th instant at 8 a. m. at St. John's Church Chundikuli. Rev. Joseph Sarvananthan conducted the service. Bible lessons — Psalm 121. Revelation 7.9:17 were read by Mr. G. Manoranjan — nephew and Mr. V. Gunaratnam — brother of the deceased respectively.

A solo "யாரிடம் செல்வோம் இறைவா" was given by Rukshanth Chinniah a member of the youth for Christ Chundikuli. Rev. D. R. Ampalavanar paid a glowing tribute to the deceased referring to his amiable qualities and indefatigable service to the Colombo Church.

A Tea followed at St John's College Hall.

### Colombo Church Remembers

On Monday the 8th September, 1986 the C. S. I. Chapel at Fussels Lane, Wellawatte was the scene of a solemn service at which the Colombo church gratefully remembered their sincere friend, and treasurer till December last year, the late Mr. V. Navaratnam of 95, Kandy Road, Chundukuli, Jaffna. The service was led by the Pastor of the church Rev. J. J. Ratnarajah. The lesson was read by Dr. W. D. Joshua, and Mrs. Kanagamalar Ratnarajah rendered a Tamil devotional to begin with. The Assistant Pastor Mr. T. Thevanesan also rendered a song. The church choir melodied a song very appropriate to the occasion. Mrs K. D. Arasaratnam the Sunday School Superintendent and the wife of the Secretary of the church, with Mr. R. W. Lyman the present treasurer gave suitable tributes to the life and service of the late Mr. Navaratnam. His services were greatly appreciated and cherished by the Government, the general community, and particularly by the church wherever he served. References were made to his genial qualities of humility, and the quiet, unassuming way in which he used his many God-given talents. On two occasions in the story of the Colombo church when she was faced with most challenging crises Mr. Navaratnam came forward spontaneously to help out, and when he left in December to continue in another field, he left the Colombo church financially in a sound position. The Pastor based his sermon on the text 2 Peter 1:11 referring to the entrance into the Everlasting Kingdom of our Lord and Saviour Jesus Christ ministered to us abundantly. The life and services of the holder of the talents is assessed, he said, not by further talents that he is able to gather, but by the use he has put to, of the talents he possessed. Mr. Navaratnam was very honest and vigilant always, and therefore on the Crown assured to him at the Entrance to the Father's Home will surely be inscribed the words: "Well done, good and faithful servant". On behalf of the church the Pastor observed that the whole church will always be indebted to Mr. Vythilingam Navaratnam for his devoted and sicere services.

### Eliatamby Memorial Fund

Mr. Selwyn Eliatamby a grandson of the Rev. S. Eliatamby of revered memory has set up a Memorial Fund for the support of the work at the Eliatamby Memorial Centre which he gave in trust to the Jaffna Diocese of the C. S. I. The Centre at Uduvil now has a pre-school Nursery and a Sewing Class for girls supported from this Fund. There is also a Boarding Home for 33 school girls who are studying at the Uduvil Girls College. This Home is supported by the Diocese. Mr. Selwyn Eliatamby has very generously set up a permanent Fund of Rs 110,000/- for the work of this Centre. This is again a very generous act which may be emulated by many others to serve the cause of the poor and the down trodden in our communities.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. Q/96/News/86.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 17th October, 1986 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna.